## முசலி பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 18 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து முசலி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் 2015 ஆம் ஆண்டிற்கான இறைச்சிக்கடை நிலுவை ரூபா 1,074,883 ஆகக் காட்டப்பட்டுள்ள போதிலும் 2015 ஆம் ஆண்டுக் கணக்குகளில் ரூபா 981,279 ஆகக் காட்டப்பட்டுள்ளது. இதனால் நடைமுறைச் சொத்து ரூபா 93,604 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) முசலிப் பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் 10 தொலைத் தொடர்பு கோபுரங்களிற்கான நிலுவை வருமானம் ரூபா 125,000 ஆகக் காணப்பட்ட போதிலும் ஐந்தொகையில் ரூபா 125,000 காட்டப்படாமையால் நடைமுறைச் சொத்து ரூபா 125,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ)1988 இன் பிரதேச சபை (நிதியும் நிருவாகமும்) | |
| ( i) விதி இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்பாக வள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| ( ii) விதி இலக்கம் 59 | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சபைப் பிரதேசத்தில் வருமான கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதி இலக்கம் 178(3) | வழங்குனர்களின் நிரல் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| ( iv) விதி இலக்கம் 218 | காணிகள், கட்டடங்கள் யாவும் ஒவ்வோராண்டும் ஆகக் குறைந்தது ஒரு முறையேனும் தவிசாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் வேறு உத்தியோகத்தரினால் சோதனை செய்யப்படவேண்டியிருந்தும் அறிக்கையிடும் திகதி வரை சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| (i) நிதி ஒழுங்குவிதி 104 | சபையின் காசு சேகரிப்பாளரிடம் 16 மே 2016 இல் பௌதீக பரிசோதனையின் போது ரூபா 12,920 பெறுமதியால் காசுக் கையிருப்பு குறைவாகக் காணப்பட்டது. கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் வரவு வைக்கப்பட்டுள்ள போதிலும் அவ் அலுவலருக்கு எதிராக 23/05/2017 வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>சபையின் காசு சேகரிப்பாளரால் 05 பல்வேறுபட்ட திகதிகளில் கூட்டுமொத்தத் தொகையான ரூபா 8,750 குறித்த திகதிகளில் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படாமல் கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் |

| | |
|---|---|
| | 15/07/2016 இல் வரவு வைக்கப்பட்டுள்ள போதிலும் அவ் அலுவலருக்கு எதிராக 23/05/2017 வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>சபைக்கு சொந்தமான சிலாவத்துறை கடைத் தொகுதி ஒன்றில் நபர் ஒருவர் எவ்வித உடன்படிக்கையும் இன்றி 09 மாத காலமாக குடியிருந்த போதிலும் சபையின் வருமான சேகரிப்பாளரால் அவ் வருமானத்தை சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் வரவு வைக்கப்பட்டுள்ள போதிலும் அவ் அலுவலருக்கு எதிராக 23/05/2017 வரை எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 371 | 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பல்வேறு செயற்பாடுகளுக்காக சபையின் உத்தியோகத்தர்களுக்கும் வெளித்தரப்பினர்களுக்கும் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 402,249 தொகை இதுவரைக்கும் தீர்க்கப்படவில்லை. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 571 | ரூபா 2,620,367 மீதிகள் நீண்டகாலமாக வைப்புக் கணக்குகளில் காலம் கடந்த வைப்புக்களின் மீதிகளாக காணப்படுகின்ற போதும் அவற்றை வருமானமாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 28.11.2002 திகதியிடப்பட்ட IAI/2002/02 இலக்க திறைசேரி சுற்றுநிருபம். | கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களிற்கு பதிவேடுகளில் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2016 திசெம்பர் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினமாக ரூபா 4,738,377 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது இதற்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 5,035,482 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 297,105 குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் நேரொத்த ஆண்டைவிட குறைவாக உயர்வடைந்தமையே ஆகும்.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் என்பவற்றிற்கிடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | பாதீடு (ரூபா) | உண்மை (ரூபா) | நிலுவை (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| வாடகைகள் | 3,130,000 | 3,242,928 | 112,928 | 4 |
| உரிமங்கள் | 360,000 | 404,921 | 44,921 | 12 |
| சேவைகளுக்கான கட்டணங்கள் | 3,075,000 | 2,080,075 | (994,925) | (32) |
| பற்றாணைச் செலவுகள் குற்றப் பணங்கள், தண்டங்கள் | 600,000 | 2,169,850 | 1,569,850 | 262 |
| ஏனைய வருமானங்கள | 112,500 | 466,089 | 353,589 | 314 |
| அரசிறை மானியங்கள் | 26,535,715 | 22,437,106 | (4,098,609) | (15) |
| **மொத்தம்** | **33,813,215** | **30,800,969** | **(3,012,246)** | |

### 2.2.2 வாடகைகள்

(அ) அரிப்பு கிழக்கு, பகுதியைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்து 20 மே 2017 வரை வாகன வாடகை ரூபா 78,000 நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது உடன்படிக்கையின் சரத்து 12 இன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) அரிப்பு பகுதியைச் சேர்ந்த இன்னுமொரு நபரிடமிருந்து 20 மே 2017 வரை வாகன வாடகை ரூபா 76,000 நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது உடன்படிக்கையின் சரத்து 12 இன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) இறைச்சிக்கடை குத்தகைத்தாரர்களால் 2015 ஆம் வருடத்திற்காக செலுத்த வேண்டிய இறைச்சிக்கடை குத்தகைகளை 20/05/2017 வரை அறவீடு செய்வதற்கோ அல்லது அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

(அ) பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் 10 பல்வேறுபட்ட உரிமையாளர்களின் போபுரங்கள் காணப்பட்ட போதிலும் அவற்றுள் 02 தொலைத்தொடர்பு உரிமையாளர்களால் 05 கோபுரற்களிற்காக 2010 - 2016 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த வாடகைக் கட்டணம் ரூபா 125,000 செலுத்தப்படாமல் நிலுவையாகக் காணப்படுகின்றது.

(ஆ) முசலி பிரதேச சபையினால் 96 மற்றும் 56 வீட்டுத்திட்ட மக்களிற்கு வழங்கப்படும் குடிநீர்ச் சேவைக் கட்டணங்கள் கணக்காய்வுத் திகதி வரை ரூபா 103,500 அறவீடு செய்யப்படாமல் உள்ளது அவதானிக்கப்பட்டது.

(இ) நீர்ச்சேவை கட்டணங்கள் அறவிடும் ஊழியரின் கவனக்குறைவின் காரணமாகவும் அக்கறையின்மையினாலும் சபைக்கு ரூபா 128,400 நட்டம் ஏற்பட்டுள்ளது அதனை கணக்காய்வுத் திகதிவரை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 முத்திரை தீர்வைக்கட்டணம்**

-----------------------------------

உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட வேண்டிய ரூபா 4,430,455 தொகையான முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு சபையினால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------

பிரதேச சபையினால் அமைக்கப்பட்ட வீதியானது மதிப்பீட்டின்படி 130 M அமைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அமைக்கப்பட்ட வீதியானது 124 M ஆகவே காணப்பட்டது. இதனால் இவ் வீதி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 249,645 பெறுமதியான செலவினத்தின் முழுமையான பயனை பெற்றுக்கொள்ள முடியாமலிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------

**3.1 சொத்து முகாமைத்துவம்**

--------------------------------

(அ) 04 வகையான சொத்துக்கள் 03 ஆண்டிலிருந்து 06 ஆண்டுகள் வரையான வீச்சுடைய காலமாக பயன்படுத்தப்படாமல் வைத்திருக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றைத் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது உரிய முறையில் ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 15.1 மில்லியன் பெறுமதியான 02 வர்த்தக தொகுதி கட்டிடங்கள் முழுமையாக இதுவரைக்கும் உபயோகிக்கப்படாமல் மூடப்பட்டுள்ளது.

(இ) பிரதம செயலாளர் வடமாகாணத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் மோட்டார் வாகன நியதிச்சட்டம் 203 பகுதி 37 இன் பிரகாரம் வாகனம் ஒன்று உபயோகிக்காது வைத்திருக்குமிடத்து 06 மாதங்களிற்குப் பிந்தாமல் பிரதேச செயலகத்தில் இருந்து பெறப்பட்ட படிவம் மோ.ஆ.107 இனைப் பூர்த்தி செய்து குறித்த வடமாகாண வெளியீட்டில் காட்டப்பட்டுள்ள காசுக் கட்டளை ஒன்றைப் பெற்று அனுப்புவதன் மூலம் வரி விலக்கினை பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கு முரணாக பிரதேச சபை முசலியினால் 18 வாகனங்கள் உபயோகிக்க முடியாமல் பல வருடங்களாக காணப்பட்ட போதிலும் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 12,850 பெறுமதியான வருமான வரியும் ரூபா 16,325 தண்டமும் செலுத்தி வரி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) கணக்காய்விற்கு சமா்ப்பிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் ஓட்ட நிலையில் காணப்படும் வாகனங்களிற்கு வாகன விடயத்திற்குப் பொறுப்பான அலுவலா் மற்றும் சாரதியின் கவனயீனத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டிற்கான வருமான வரி அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா 8,650 தண்டம் செலுத்தப்பட்டிருந்தது.

**4. நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்**

---------------------------------------------------

**4.1 நிதிக்கூற்றுக்களை சமா்ப்பித்தல்**

--------------------------------------

(அ) இறுதிக் கணக்குகளுடன் காசுப்பாச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) பரீட்சைமீதி மற்றும் வருமான செலவினக் கணக்குகளில் ரூபா குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

--------------------------

(அ) மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 26 தலைப்புகளிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 6,632,600 செலவினங்களின் ஒதுக்கீடுகள் 40 வீதம் - 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட 09 தலைப்புக்களிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 2,195,255 செலவினங்களின் ஒதுக்கீடுகள் 100 வீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

----------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்புக்கள்
(உ) கணக்கீடு

.